Journal of Valartamil, eISSN 2716-5507
Volume 5, No.1, 2024, (35-39)

# Measuring Form 2 Students' Reading Skills Based on Flashcards Designed using the Bottom-Up Theory

# கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு பயிற்றுவித்தலின் இரண்டாம் படிவம் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்

**Selambarasan Massilamani**

Faculty of Languages and Communication
Universiti Pendidikan Sultan Idris, 35900 Tanjong Malim, Perak, Malaysia

email: d100679@siswi.upsi.edu.my

**Published:** 25 April 2024

**To cite this article (APA):** Measuring Form 2 Students' Reading Skills Based on Flashcards Designed using the Bottom-Up Theory: கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு பயிற்றுவித்தலின் இரண்டாம் படிவம் மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல். (2024). *Journal of Valartamil*, *5*(1), 35-39. https://doi.org/10.37134/jvt.vol5.1.5.2024

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol5.1.5.2024

**Abstract:** This study investigates the enhancement of Form 2 students' reading skills using Flashcards designed based on the Bottom-Up Theory. The researcher implemented The Bottom-Up Theory to identify key reading skill components such as Pronunciation, tone, speed, and fluency. Findings revealed that most students face Challenges in developing their reading skills. The study aimed to (1) assess the Baseline reading skills of Form 2 students before the intervention using flashcards. Based on the Bottom-Up Theory, (2) evaluate their reading skills after the Intervention, and (3) analyze the overall impact of the flashcard-based training on Their reading abilities. The research was conducted at a secondary school in Jasin District, Malacca, involving three Form 2 students who had opted for Tamil as a subject. This qualitative study utilized tools such as flashcards, pre-tests, training sessions, post-tests, and structured questionnaires to collect data. The findings confirmed that training with flashcards designed based on the Bottom-Up Theory significantly improved students reading skills, particularly in pronunciation, tone, speed, and fluency. This research highlights the effectiveness of employing structured, theory-based learning tools to address reading challenges among secondary school students.

**Key Words:** Flashcard, Reading

## முன்னுரை

இந்த ஆய்வானது இரண்டாம் படிவ மாணவர்களின் வாசிப்புத் திறன் அடைவுநிலையைக் கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில்

வடவமைக்கப்பட்ட திரை அட்டை (Flash Card) வழி மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிட்டத்தக்கதாகும். இந்த இயலானது ஆய்வை அறிமுகப்படுத்தும் இயலாகும். இந்த இயலில் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, கலைச்சொல் விளக்கம், தொகுப்புரை போன்ற முக்கியக் கூறுகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

## ஆய்வுப் பின்னணி

1988ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட இடைநிலைப் பள்ளிகளுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட பாடத்திட்டத்தில்தான் தமிழ்மொழிக்கு முறையான கலைத்திட்டம் உருவாக்கப்பட்டது. இப்பாடத்திட்டதைக் கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு தயாரித்து வழங்கியுள்ளது. இக்கலைத்திட்டத்தில் அடிப்படை மொழித் திறன்களாகிய கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்கள் இணைக்கப்பட்டுள்ளது (மலேசியத் தமிழ்க்கல்வி வரலாறு, 2018).

2015ஆம் ஆண்டிலிருந்து தற்போது நடைமுறை வரைக்கும் இடைநிலைப்பள்ளிகளுக்கான தர ஆவணத்தில் (KSSM) அனைத்து மொழி பாடத்திலும் வாசிப்புத் திறனுக்கும் நான்கு உள்ளடக்கத் தரங்கள் கொண்டுள்ளன. மாணவர்கள் வாசிப்புத் திறனைக் கற்றுக் கொள்ளும் பொது, உச்சரிப்பு, தொனி, வேகம், நிறுத்தக்குறிகள் போன்ற கூறுகள் அடிப்படையாகக் கொண்டு வாசிக்க வேண்டும். இந்த ஆய்வில் சரியான வேகம், தொனி, உச்சரிப்பு ஆகியவற்றுடன் நிறுத்தற்குறிகளுக்கேற்ப வாசிப்பர் எனும் உள்ளடக்கத் தரத்தை மையமாக கொண்டு அமைகிறது. ஆகவே, ஆய்வாளர் கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு பயிற்றுவித்தலின் இரண்டாம் படிவம் மாணவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்டது.

## ஆய்வுச் சிக்கல்

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து எனும் மொழி திறன்கள் ஒவ்வொரு மாணவனும் கைவரப்பெற வேண்டும். அதில் குறிப்பாக வாசிப்புத் திறன் மாணவர்களிடையே வளர்க்க தேசிய தமிழ் கல்வி கலைத்திட்டம் வலியுறுத்துகிறது. ஏனென்றால், உ.அசா, எஸ்.பி.எம் தேர்வு எடுக்கும் படிவம் 3 மற்றும் படிவம் 5 மாணவர்களுக்கு பனுவலை வாசித்து கருத்துணர்தல் கேள்வி பதிலளித்தல் எனும் தேர்வு நடத்தப்படுகிறது. அதில் மாணவர்கள் சிறந்த மதிப்பெண்களை எடுக்க வாசிப்பு திறன் முக்கிய பங்களிக்கின்றது. அவ்வகையில் ஒரு சில மாணவர்களால் வாசிப்புத் திறனில் சிறந்து விளங்க முடியாத நிலையில் இந்த கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்புத் திறன் அடைவுநிலையை மேம்படுத்த உதவுகிறது.

ஆய்வாளர் இந்த கோட்பாட்டைத் தேர்தெடுத்த காரணமானது மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்த எதுவாக இருக்கும் என்பதாகும். அதுமட்டுமல்ல, கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்பது மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமையும். கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்பது ஆசிரியர், மாணவர் மற்றும் பள்ளிப் பாடத்திட்டத்திற்கும் ஏற்புடையதாக அமையும் என்பதை இந்த ஆய்வின் வழி ஆய்வாளர் கண்டறியவுள்ளார்.

## ஆய்வு நோக்கம்

இவ்வாய்வு மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை:

I. கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு பயிற்றுவித்தலுக்கு முன் இரண்டாம் படிவம் மாணவர்களின் வாசிப்புத் திறன் அடைவுநிலையைக் கண்டறிதல்.
II. கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு பயிற்றுவித்தலுக்குப் பின் இரண்டாம் படிவம் மாணவர்களின் வாசிப்புத் திறன் அடைவுநிலையைக் கண்டறிதல்.
III. கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டைப் பயிற்றுவித்தல் மீதான இரண்டாம் படிவம் மாணவர்களின் கண்ணோட்டத்தைக் கண்டறிதல்.

## ஆய்வு கருவி

ஆய்வாளர் திரை அட்டையை (Flash Card) ஒரு ஆய்வுக் கருவியாக பயன்படுத்தியுள்ளார். இரண்டாம் படிவம் தமிழ் மொழி பாடநூல் பக்கம் 200யில் ‘நெகிழியால் ஆபத்து!’ எனும் தலைப்பில் வாசிப்புப் பனுவல் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த திரை அட்டையில் அமலாக்கம் செய்த கீழிருந்து மேல் கோட்பாடு அதாவது முதலாவது எழுத்து படிநிலைக்கு உச்சரிப்பு, இரண்டாவது சொல் படிநிலைக்குத் தொனி, மூன்றாவது வாக்கியம் படிநிலைக்கு வேகம், நான்காவது பத்தி படிநிலைக்குச் சரளம் எனும் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டது. எடுத்துக்காட்டு முதல் எழுத்து படிநிலையான உச்சரிப்பிற்கு லகரம், ளகரம், ழகரம், தந்நகரம், றன்னகரம், டண்ணகரம், ரகரம், றகரம் ஆகிய பயிற்சிகளைப் படங்களோடு மாணவர்களுக்குக் கற்பிற்கப்பட்டது. இரண்டாவது சொல் படிநிலைக்குத் தொனி ஏற்றம் இறக்கம் குறிப்பாக ஏனென்றால், ஆகவே, இருந்தாலும், மேலும் போன்ற இடைச்சொற்களில் பயிற்சியளிக்கப்பட்டது. மூன்றாவது வாக்கியம் படிநிலைக்கு வேகம் மாணவர்கள் நிறுத்தக்குறிகளுக்கேற்ப வாசிக்கப்பட்டது. இறுதியாக, பத்தி படிநிலைக்குச் சரளம். இதில் மாணவர்கள் இதற்கு முன் பயின்ற உச்சரிப்பு, தொனி, வேகம் ஆகிய படிநிலைகளை கைவரப்பெற்றவுடன் இயல்பாக சரளத்துடன் ஒரு பத்தியை வாசிப்பார்கள். ஆய்வாளர் உருவாக்கிய திரை அட்டை அனைத்தும் (பின்னிணைப்பு 1)யில் வைக்கப்பட்டுள்ளது. இந்த திரை அட்டை வழிகாட்டி ஆசிரியரால் சரி பார்க்கப்பட்டது. அதுமட்டுமல்லாது, திரை அட்டை மாணவர்களின் நிலைக்கேற்ப உருவாக்கப்பட்டது. கடினமாக இல்லாமலும் சுலபமாக இல்லாமலும் நடுத்தர நிலையில் மாணவர்களுக்குப் புரியும் வகையில் அமைந்தது.

## வினா

**வினா 1: கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு பயிற்றுவித்தலுக்கு முன் இரண்டாம் படிவம் மாணவர்களின் வாசிப்புத் திறன் அடைவுநிலையைக் எவ்வாறு கண்டறிவது?**

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூன்று மாணவர்களின் வாசிப்புத் திறன் அடைவுநிலை முன்னறித் தேர்வின் வழி கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டது. முதல் நிலை, இடை நிலை, கடை நிலை ஆகிய மூன்று நிலை மாணவர்கள் இருப்பதால் வாசிப்புத் திறன் அடைவுநிலை மாறுபடுகின்றன என்பது

குறிப்பிடத்தக்கதாகும். மாணவர் 1 கடை நிலையும், மாணவர் 2 இடை நிலையம், மாணவர் 3 கடை நிலையம் பிரதிநிதிகின்றனர். இவர்களில் மாணவர் 1 மற்ற மாணவர்களை விட வாசிப்பில் அதிக தவறு செய்துள்ளார். இதற்கு சான்றாக, முன்னறித் தேர்வில் மாணவர் 1 வாசிப்புக் கூறுகளில் அதிகம் தவறு செய்வதை நம்மால் காணமுடிகிறது. எடுத்துகாட்டு, உச்சரிப்பில் 'தாய்மொழி' என்பதற்கு 'தாய்மொலி' எனும் தவறாக உச்சரித்துள்ளார். பிறகு, வாசிக்கும் போது 'பயிற்றுவிக்கப்படுகின்ற' எனுதை 'பயிற்று...விக்க...ப்ப...டுகின்ற' என்று வாசித்துள்ளார். இதனால், வாசிப்பில் வேகம் குறைந்து தடுமாற்றத்தை ஏற்படுத்துகிறது. தொடர்ந்து, வாசிக்கும் பொது 'பேசுவதாலோ' எனும் சொல்லில் தொனி இறக்கத்தைக் காணமுடிகிறது. இறுதி படிநிலையில் மாணவர் 1 பத்தியை வாசிக்கும் பொழுது சரளமின்மை ஏற்படுகின்றது. இந்த அடைவுநிலை மிகவும் குன்றி இருப்பதை ஆய்வாளரால் காண முடிந்தது. கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைப் பயிற்றுவித்தலுக்கு முன் வேகம், தொனி, உச்சரிப்பு, சரளம் ஆகிய வாசிப்பு கூறுகளின் அடிப்படையாக கொண்டு மாணவர்களின் குறைகள் அனைத்தும் கண்டெடுக்கப்பட்டது. இதன் காரணமானது மாணவர்களின் தவறுகளைச் சரிசெய்வதற்கு புதிய அணுகுமுறைகளை வாசிப்பில் மேம்படுத்த வேண்டும். அவர்களுக்கு சலிப்புத்தட்டாமல் புதிய அணுகுமுறை அதாவது திரை அட்டை ஆகியவற்றை வாசிப்புத் திறனில் பயன்படுத்த வேண்டும். இதற்கு துணையாக, Parawansa, Haryanto & Mulyani, (2022) எனும் ஆய்வாளர்கள் 'திரை அட்டை பயன்படுத்துவதன் வழி MI Klesman மாணவர்களின் இந்தோனேசியா மொழி பாடத்தில் வாசிப்புத் திறனை மேம்படுத்துதல்' எனும் ஆய்வை மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்வு, MI Klesman பள்ளியானது வாசிப்பு கற்பித்தல் பெரும்பாலும் பாடப்புத்தகத்தை மையமாகக் கொண்டது, ஆனால் குழந்தைகள் எவ்வளவு வேகமாக வாசிக்கிறார்கள் அல்லது அவர்களின் புத்தகத்தில் உள்ள எழுத்துக்களை எவ்வளவு நன்றாக அடையாளம் காண்கிறார்கள் என்பதை கவனிப்பதில்லை. எனவே, குழந்தைகளை வாசிப்பைப் பற்றி மேலும் ஆர்வமாகவும், அதைப் படிக்க மிகவும் உற்சாகமாகவும் மாற்றுவதற்கான பயனுள்ள மற்றும் உற்சாகமான நுட்பம் அல்லது முறை தேவைப்படுகிறது. அதில் ஒன்று திரை அட்டை பயன்படுத்துவதாகும், இந்த திரை அட்டை விளையாட்டு முறையாகவும் எழுத்துகளாகவும் கொண்டுள்ளது, இதனால் குழந்தைகள் ஈர்க்கப்பட்டு சலிப்படையாமல் இருப்பார்கள். திரை அட்டையை பயன்படுத்துவது மாணவர்களுக்கு மிகவும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை குறிபிட்டுள்ளார்.

## முடிவு

இந்த ஆய்வு கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு பயிற்றுவித்தலின் மீதான இரண்டாம் படிவம் மாணவர்களின் வாசிப்புத் திறன் அடைவுநிலையைக் கண்டறிவதற்காக மேற்கொள்ளப்பட்டது. கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்புத் திறன் அடைவுநிலையை மேம்படுத்தும் ஆய்வுகள் அதிகாமாக இல்லை எனலாம். இதற்கு துணையாக, Lourdes dan Silvana (2011) ஆகியோர் திரை அட்டையை காட்சிப்பொருளாகப் பயன்படுத்துவது ஒரு புத்திசாலித்தனமான அணுகுமுறை என்று வலியுறுத்துகின்றனர். ஏனெனில், திரை அட்டை கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் பல்வேறு வழிகளில் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பை ஆசிரியர்களுக்கு வழங்குகின்றது. எனவே, வரும் காலங்களில் ஆய்வுகளை

மேற்கொள்ளவிருக்கும் ஆய்வாளர்கள் இந்த கீழிருந்து மேல் கோட்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட திரை அட்டையைக் கொண்டு வாசிப்புத் திறனின் அடைவுநிலையை மேம்படுத்தலாம். அதுமட்டுமல்லாமல், வருங்கால ஆய்வாளர்கள் வாசிப்புத்திறன் அடைவுநிலையை மேம்படுத்த வெவ்வேறு அணுகுமுறைகளைப் பயன்படுத்திதல் சிறப்பாகும்

**REFERENCES**

Veeraratchagi, R. (2021). மூன்றாம் ஆண்டு மாணவர்களின் லகர ழகர ளகர சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தலை மேம்படுத்த QR குறியீட்டு தகவல் தொழில்நுட்ப வழி வாசிப்புச் சிப்பம் construction and evaluation of reading module based on QR barcode technology in improving SJK(T) year 3 Stude. *Journal of Tamil Peraivu*, *10*(2), 132-139. https://doi.org/10.22452/jtp.vol10no2.13

ஏஞ்சல் ஜெயந்தி. (2020). முதலாம் படிவ மாணவர்களின் உரக்க வாசிக்கும் திறனை மேம்படுத்துதல்.